# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் அயர்லாந்திலுள்ள காட்வே பகுதியில் 17.09.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா பக்கராவின் 128, 129 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

**இப்ராஹீமும், இஸ்மாயீலும் அந்த வீட்டின் அடித்தளங்களை உயர்த்திய நேரத்தையும் (எண்ணிப் பாருங்கள்). (அப்போது அவ்விருவரும்), எங்களுடைய இறைவா! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே நன்கு கேட்பவனும், நன்கு அறியக் கூடியவனுமாவாய் (என்று வேண்டினர்).**

**எங்களுடைய இறைவா! எங்கள் இருவரையும் உனக்குக் கட்டுப்படக்கூடிய (அடிய)வர்களாக விளங்கச் செய்வாயாக! எங்களுடைய வழித்தோன்றல்களில் இருந்தும் உனக்குக் கட்டுப்படக்கூடிய, ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிப்பாயாக). எங்களுக்கு (ஏற்ற) வணக்க வழிமுறைகளையும் எங்களுக்குக் காட்டித் தந்தருள்வாயாக. எங்களிடத்து (உனது) அருளுடன் கவனம் செலுத்துவாயாக! நிச்சயமாக நீயே மிகுந்த கவனம் செலுத்தக்கூடியவனும் பெருங்கருணை காட்டக்கூடியவனுமாவாய் (என்றும் நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்). (2:128,129)**

அயர்லாந்தில் இது எனது முதல் பயணமாகும். அயர்லாந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் முதல் மஸ்ஜிதின் அடிக்கல்லை நாட்டுவது எனது பயணத்தின் நோக்கமாகும். நீண்ட காலமாக நீங்கள் இப்பகுதியில் வசிக்கின்றீர்கள். கப்ரன் பகுதியில் பள்ளிவாசல் கட்டுவதா? காட்வே பகுதியில் பள்ளிவாசல் கட்டுவதா? என்ற குழப்பம் இருந்தது. அல்லாஹ்வுக்கு நன்றி! நான் சில காரணங்களைக் கருத்தில் கொண்டு கூறியதற்கிணங்க, காட்வே பகுதியில் பள்ளிவாசலைக் கட்டலாம் என்று மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். பார்க்கப்போனால் காட்வே பகுதியும் உலகின் ஒரு விளிம்பாகவே உள்ளது. கடற்கரை ஓரத்தில் இந்த ஊர் உள்ளது. இதற்குப் பிறகு அட்லாண்டிக் பெருங்கடல் ஆரம்பமாகிறது. அதன் பிறகு நேராக ஐரோப்பாவிற்கு செல்ல எந்த வழியும் இல்லாமல் இத்துடன் முடிவடைகிறது. இங்கிருந்து நேரான ஒரு கோடு கிழித்தால் கடலுக்கு அப்பால் கனடா, அமெரிக்கா தான் இருக்கின்றது. எனவே இதுவும் கூட உலகின் விளிம்பாகவே இருக்கிறது. இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்கு பள்ளிவாசல் கட்டுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. பள்ளிவாசல் கட்டுவதன் நோக்கம் நாம் நமது உள்ளங்களை தூய்மையாக்கியவாறு நம்மை இறைவனுக்கு இபாதத் செய்யக்கூடியவர்களாக்கியவாறு மஸ்ஜிதுகளில் ஐந்து வேளை ஒன்றுகூடி அவன் முன்னால் குனிய வேண்டும் என்பதாகும்.

தவ்ஹீதின் தூதுச் செய்தியை இதன் மூலமாகவும் உலகிற்கு சென்று சேர்க்க வேண்டும். லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற முழக்கத்தை உயர்த்தி இந்த தூதுச் செய்தியை உலகிற்கு கொண்டு சேர்க்க வேண்டும்.

உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் இந்த முழக்கம் உயர்ந்து அர்ஷை அடையும் போது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களில் நாமும் இணைவோம்.

அல்லாஹ் இந்த முஹம்மதிய மஸீஹை இதற்காகவே உலகில் அனுப்பினான். முந்தைய நபிமார்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தன்னுடைய உண்மைப் பேரன்பர் வரப்போவது பற்றிய தூதுச் செய்தியை தந்தார்கள். அவரது பணியும் நோக்கமும்கூட அல்லாஹ் அக்பர் என்ற முழக்கத்தை உலகில் பரவச் செய்வதுதான்.

லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற செய்தியை உலகிற்கு தந்து உலகை ஒரே கையில் ஒன்றுசேர்த்து அல்லாஹ்வின் முன் குனிபவர்களாக்க வேண்டும். அல்லாஹ்வுடைய அன்பிற்குரிய ரஸூல் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய தாசர்களாக மாற வேண்டும். இதுவன்றி வேறு எந்த தூதுச் செய்தியையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டு வரவில்லை. அல்லாஹ் அவர்களிடம் ஒரு நற்செய்தியைக் கொடுத்து இந்த வாக்குறுதியை வழங்கினான்.

**நான் உனது பிரச்சாரத்தை பூமியில் எல்லை வரை எட்ட வைப்பேன்.** இதன் பொருள்: அல்லாஹ்வின் அன்பிற்குரிய இறுதி ரஸூல் காத்தமுல் அன்பியாவும், ரஸூல்மார்களுக்கு பெருமை சேர்ப்பவரும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கொண்டு வந்த செய்தியை உலகில் எட்ட வைப்பேன் என்பதுதான்.

அன்னார் ஷரீஅத்தை நிறைவு செய்தார்கள். மேலும் அல்லாஹ்வின் நிஃமத்தை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு தனக்கு வழங்கப்பட்ட நிஃமத்தைக் கொண்டு அருள்புரிந்தார்கள்.

எனவே, **நான் உனது பிரச்சாரத்தை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்** என்று அல்லாஹ் கூறினான்.

இதன் பொருள்: இந்த தூதுச் செய்தியை உலகில் பரப்புவதில் அவர்களுக்கு எந்த அளவுக்கு கவலையிருந்தது என்றால் அன்னார் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் அடியொற்றி தமது உயிரையும் அர்ப்பணித்தார்கள். அல்லாஹ் ஒரு மார்க்கத்தை உலகில் வெற்றிபெறச் செய்வேன் என்று கூறினால் அது முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கம் தான். முஹம்மதிய மஸீஹே! உம்மை இந்த மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யும் ஆதாரமாக ஆக்கினோம் என்பது எனது வாக்குறுதியாகும். இதுவே எனது தக்தீர் ஆகும். இஸ்லாமே இறுதி வெற்றி பெற வேண்டியுள்ளது. நமது வசதிவாய்ப்புகளின் பற்றாக்குறை மற்றும் வழியில் உள்ள எண்ணற்ற தடைகளின் காரணத்தால் சங்கடப்பட வேண்டாம். முஹம்மதிய மஸீஹே! உனது பொறுப்பில் உள்ள பணியை நீ செய்துள்ளாய். அது உனது பணி மட்டுமல்ல. இறை நியதியும் கூட. (உனது வெற்றியே) இறை நியதியாக இருக்கும்பட்சத்தில் இறைவனது உதவி ஒத்தாசைகளும் உன்னுடன் இருக்கும். இந்த எல்லா வசதிக்குறைவுகள், மனித பலவீனங்கள், வழியில் உள்ள எண்ணற்ற தடைகள் இருந்தபோதிலும் என்னுடைய மற்றும் எனது ரஸூலுடைய கொடியின் கீழ் உலகத்தை கொண்டு வரும் உனது பிரச்சாரத்தை நான் எனது எல்லா வல்லமைகளையும் கொண்டு முழுமைப்படுத்தி விடுவேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு இதற்கு சாட்சியாகும். நாம் இறைவனின் உதவி ஒத்தாசைகளை பார்த்து வருகிறோம்.

M.T.A மூலமாக இந்த அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தி எவ்வாறு உலகத்திற்கு சென்று சேர்க்கிறது என்று பாருங்கள். காலத்தின் கலீஃபா எங்கு சுற்றுப் பயணம் சென்றாலும் அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கலீஃபாவின் குரல் மூலமாக இந்த தூதுச் செய்தி அந்நாட்டிற்கு போய் சேர்கிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று ஃபிஜி மற்றும் இன்னும் சில இடங்களிலும் நான் இதனை கூறியுள்ளேன். இந்த விளிம்பிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தி அவர்களது கலீஃபா மூலமாக உலகின் எல்லைகள் வரை சென்று சேர்கிறது. உலகின் விளிம்பிலிருந்து உலகின் மையப் பகுதி வரை நீரிலும் நிலத்திலும் எல்லா பகுதிகளும் இந்த தூதுச் செய்தி பரவுகிறது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு எத்துணை பெரிய ஆதாரம்! கண்ணுள்ளவர்கள் பார்க்கட்டும்! இது இறை உதவிகள் ஒத்தாசைகள் நிறைவேறியதற்கு ஆதாரமாகும்.

இன்று இங்கிருந்து ஒளிபரப்பாகிய குத்பாவும் கூட அந்த இறை உதவியின் ஓர் அம்சமாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இப்பகுதியும் உலகின் ஒரு விளிம்பாகும். மேலும் எந்த பணியை முஹம்மதிய மஸீஹின் பொறுப்பில் அல்லாஹ் விட்டிருக்கின்றானோ அதே பணி அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. நாம் எப்போதும் இவ்விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறைவனது வாக்குறுதி இருந்தபோதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு கவலை இருந்தது. அல்லாஹ் மீண்டும் மீண்டும் அன்னாருக்கு ஆறுதல் வழங்கிக் கொண்டே இருந்தான். இருந்தபோதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது முயற்சியில் ஒரு குறைவும் வைக்கவில்லை. தனது துஆவைக் குறைக்கவுமில்லை. அவர்களது கவலையும் குறையவில்லை. நமது குறைபாட்டினால் எங்கே இறைவாக்குறுதி தள்ளிப் போய் விடுமோ! அல்லது ஏதாவது நமது பலவீனம் இறைகோபத்திற்கு காரணமாகி விடுமோ என்ற கவலை இருந்தது. இந்த கவலைகளையெல்லாம் அன்னார் தமது வழிகாட்டியும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் இருந்துதான் கற்றார்கள். நாம் அது குறித்து படித்துள்ளோம்; கேட்டுள்ளோம். பத்ர் யுத்தத்தில் இறைவனது எல்லா வாக்குறுதிகளும் இருந்தும்கூட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிம்மதியிழந்தார்கள். துஆ மற்றும் கவலையின் நிலையில் நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் உடல் எந்த அளவுக்கு துடித்தது என்றால் அவர்களின் தோள் மீது கிடந்த போர்வை நழுவி நழுவி விழுந்தது.

அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மீண்டும் மீண்டும் ஆறுதல் கூறினார்கள். அல்லாஹ்வுடைய வாக்குறுதி தங்களுடன் உள்ளது. நாம் பலவீனமாக இருந்தால் என்ன? எப்போதும் அல்லாஹ் நமக்கு உதவி செய்துள்ளான். இப்போதும் உதவி செய்வான்!

இறைவன் நிச்சயமாக நம்முடன் இருக்கிறான் என்பதையும், இறைவனுடைய வாக்குறுதி உண்மையானது என்பதையும் வெற்றி நிச்சயமாக நம்முடையது என்பதையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட நன்றாக அறிந்தவர் யார்?

ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களது பேச்சை பொருட்படுத்தாமல் அல்லாஹ்வின் முன் உருகி அழுவதை தொடர்ந்தார்கள். துஆவில் அழுத்தம் கொடுத்துக் கொண்டே சென்றார்கள். அல்லாஹ்விடம் துஆ கேட்டுக் கொண்டே இருந்தார்கள். தமது ஏதேனும் பலவீனத்தால் அல்லாஹ்வின் வாக்குறுதி தள்ளிப்போய் விடக் கூடாது என்பதற்காக!

அல்லாஹ்வுடைய அன்பிற்குரியவர் அல்லாஹ்வின் வாக்குறுதி நிச்சயமாக நிறைவேறும் என்று உறுதி கொண்ட அதே வேளையில் அல்லாஹ் தன்னிறைவு பெற்றவன் அல்லவா? நம்மிடமுள்ள ஏதாவது ஒரு செயல் அவனது வாக்குறுதியை தள்ளிப்போட காரணமாகி விடக்கூடாதே என்ற கவலையும் இருந்தது. இதுவே அன்னாரது வழிகாட்டலாகும். இதுவே உண்மையாகும். இதனை அன்னாரை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் பற்றிப் பிடிக்கின்றனர்; அவ்வாறு பற்றிப்பிடிக்கவும் வேண்டும். அம்மக்கள் தமது முயற்சியை தளர்த்துவதும் இல்லை. தமது துஆவை குறைப்பதும் இல்லை. தமது தியாகம், அமல்களின் மீது இறுமாப்புடன் இருந்துவிடுவதும் இல்லை. மாறாக எப்போதும் அல்லாஹ்வின் பயத்தை உள்ளத்தில் கொண்டவாறு அல்லாஹ்வின் அருளை தேடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தமது உள்ளத்தில் ஒருபோதும் நமக்கு கிடைக்கிற வெகுமதிகள் நமது செயல்களின் விளைவுதான் என்ற எண்ணத்தை வரவிடுவதில்லை. இந்தப் பாடத்தைத்தான் திலாவத் செய்த வசனத்திலிருந்து பெறுகிறோம். அபுல் அன்பியா (நபிமார்களின் தந்தை) யாகிய ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களின் உதாரணத்தை தந்து அவர்களின் சம்பவங்களை எடுத்துக் கூறி அல்லாஹ் இதன்பக்கம் கவனமூட்டினான்.

இதன் மீது கவனம் செலுத்துங்கள். அதிலிருந்து நமக்கு கிடைக்கும் பாடமாவது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களது மகன் இஸ்மாயீல் (அலை) அல்லாஹ்வின் வீட்டின் சுவர்களை கட்டியபோது மிகவும் பணிவுடன் துஆ செய்தார்கள்.

அல்லாஹ்வே உனது கட்டளையினால் நாங்கள் செய்யக்கூடிய இந்த பணியை ஏற்றுக் கொள்வாயாக! இதுவே பணிவின் உச்சகட்டமான நிலையாகும். ஒரு பணியை பற்றி அவர்களுக்கே தெரியாது. கஃபாவின் அடித்தளத்தை இறைவன் தான் அடையாளம் காட்டிக் கட்டச் செய்தான். இது மிகவும் புராதனமாக வீடு என்றும் அவனே ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு கூறினான். உலகம் உள்ளவரை ஏகத்துவத்தின்

அடையாளமாக இருக்கும். அல்லாஹ் இந்த கட்டடத்தை தவ்ஹீதின் அடையாளம் ஆக்கினான். பிறகும் கூட துஆ செய்தார்கள். அல்லாஹ்வே நாங்கள் உனது கட்டளைக்கேற்ப இதனை கட்டுகிறோம். இதனை கட்டுவதுடன் சேர்த்து எமது தியாகத்தை இணைப்பாயாக! இது கட்டப்பட்ட பிறகு நாங்கள் எமது தியாகத்தை இத்துடன் இணைத்தவாறு துஆ செய்த பிறகு இந்த ஒன்றுமற்ற இடத்தை குடியிருப்பாக மாற்றும் பொறுப்பும் எம்மீதுதான் விழும் என்ற பயம் ஒன்றும் எமக்கில்லை. மாறாக, அல்லாஹ்வே! நாங்கள் துஆ செய்கிறோம். எமது துஆவை ஏற்று எந்த அருளுக்கு எம்மை வாரிசாக்குவாயோ அந்த அருளுக்கு முன்னால் எமது தியாகம் அற்பமானது. பிறகு நாம் செய்த தியாகத்தை ஏற்றுக் கொள்வதும் கூட உனது அருளையே சார்ந்துள்ளது. நாம் இதனை அறிந்து தான் உள்ளோம். நாம் இப்போது தியாகம் செய்துள்ளோம்தான். ஆனால் இதன் உண்மை நிலை என்ன என்று எங்களுக்கு என்ன தெரியும்? நாங்கள் செய்தது தியாகம் தானா? இல்லையா? என்று எங்களுக்கு என்ன தெரியும்? எனவே நீயே துஆக்களை கேட்பவனாவாய். நாங்கள் உன்னிடமே பணிவுடன் துஆ செய்கிறோம். உனது வீடு உனது கட்டளையால் கட்டப்படுகிறது. இதனைக் கட்டுவதற்கு நாம் என்னவெல்லாம் எடுத்து வைத்துள்ளோமோ அதனை உனது அருளால் மட்டுமே ஏற்றுக் கொள்வாயாக! ஏற்றுக் கொண்டதன் விளைவு எப்படி வெளிப்படும்? எமது பெயரும் இதனுடன் இணைக்கப்படுவதன் மூலம் வெளிப்படும். அல்லாஹ்வுடைய சமீ (கேட்பவன்) என்ற பண்பை சுட்டிக்காட்டி துஆவை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார்கள். அத்துடன் இறைவனது அலீம் (நன்கறிந்தவன்) என்ற பண்பையும் இணைத்தார்கள். அல்லாஹ்வே நீ அலீம் ஆவாய். எமது உள்ளத்தில் என்ன இருக்கிறது என்று நீ நன்றாக அறிகிறாய். எமது உள்ளத்தின் நிலை உனக்கு மறைமுகமானதல்ல.

நிச்சயமாக நீ நன்றாக அறிவாய். நாங்கள் களங்கமற்ற முறையில் உன் முன்னால் குனிந்துள்ளோம்! குனிய விரும்புகிறோம். எனவே நீ ஏற்றுக் கொள்வாயாக! இந்த பள்ளிவாசலுடன் இணைந்த எல்லா வெகுமதிகளும் எம்மை எப்போதும் வாரிசாக்குவாயாக! உலகம் நிலைநிற்கும் வரை தவ்ஹீதின் பெயர் இங்கிருந்து உயர்த்தப்படட்டுமாக! எமது பெயரையும் நீ அத்துடன் இணைப்பாயாக! இந்த துஆ செய்தார்கள். இந்த வீட்டிற்கு (கஃபாவிற்கு) வருபவர்களும் எம்மை (இப்ராஹீம் நபியை) நினைவு கூறுங்கள். இந்த தந்தையும் மகனும் செய்த தியாகங்களை இன்று வரை நாம் நினைவில் வைத்துள்ளோம். முஸ்லிம்கள் தரூது ஓதும்போதும் ஒவவொரு தொழுகைகளின் கடைசி ரக்அத்திலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தரூது அனுப்பும் போது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் அவரது குடும்பத்திற்கு செய்த அருள்களை நினைவு கூறுகிறோம். இந்த கண்ணியம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு கிடைத்தது என்றால் அன்னாருடைய பற்று, விசுவாசம் மற்றும் முழுமையான முறையில் இறைவனுக்கு முன்னால் தம்மை அர்ப்பணிக்க தயாராகி விட்டதன் காரணத்தால் கிடைத்தது. இதனை அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு விவரிக்கின்றான்.

**(இறை கட்டளையை) நிறைவேற்றிய இப்ராஹீமைக் குறித்தும் (அறிவிக்கப்படவில்லையா?) (53:38)**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எதுவரை மனிதன் உண்மையான உள்ளத்துடன் இறைவனது அடியார் ஆகமாட்டாரோ அதுவரை எந்த தகுதியையும் பெறுவது கஷ்டமாகும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி இறைவன் சாட்சி கூறினான்: **(இறை கட்டளையை) நிறைவேற்றிய இப்ராஹீமைக் குறித்தும் (அறிவிக்கப்படவில்லையா?) (53:38)**

உள்ளங்களை அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து தூய்மைப்படுத்தி இறைநேசத்தை நிறைப்பது, இறை திருப்திக்கேற்ப நடப்பது, பிம்பம் உருவத்தை ஒத்திருப்பது போன்று அவரது விருப்பமும் இறைவிருப்பமும் ஒன்றாகி விடுவது, எந்த வித்தியாசமும் இல்லாமல் போவது ஆகிய எல்லா விஷயங்களும் துஆவின் மூலமே கிடைக்கின்றன.

**பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:**

ஆண்மையின்மை, கோழைத்தனம், தைரியமில்லாமை, நன்றிகேடு, இறைவனுடன் பற்றுள்ள தொடர்பு வைக்காமை இவற்றிற்கு என்ன மதிப்புள்ளது? ஒன்றுமே இல்லை. எல்லா மதிப்பும் சிறப்பும் பற்று, விசுவாசத்திற்கே உள்ளது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு கிடைத்த சிறப்பு அந்தஸ்து எந்த அடிப்படையில் கிடைத்தது?

திருக்குர்ஆன் தனது தீர்ப்பைக் கூறிவிட்டது: **(இறை கட்டளையை) நிறைவேற்றிய இப்ராஹீமைக் குறித்தும் (அறிவிக்கப்படவில்லையா?) (53:38)**

இப்ராஹீம் நம்முடன் பற்று விசுவாசமுள்ளவராக இருந்தார். நெருப்பில் போடப்பட்டார். அப்போது கூட காஃபிர்களின் கூற்றை ஏற்று உங்கள் சிலைகளை நான் வணங்குகிறேன் என்று பணியவில்லை. அல்லாஹ்வை இபாதத் செய்வதை விடுத்து மற்றவற்றை இபாதத் செய்வதை மறுத்து விட்டார். இது முழுமையான பற்று, விசுவாசம் ஆகும்.

எனவே நாம் நமது பள்ளிவாசல்களை கட்டும் விழாக்களில் இந்த வசனத்தைதான் ஓதுகிறோம். காரணம் இதுவே உயிர் ஆகும். இதனை நம் முன்னால் வைக்க வேண்டும். இந்த பள்ளிவாசலை கட்டுவதற்காக நாம் பல தியாகங்களை செய்துள்ளோம்! ஆனால் அது காட்டுவதற்காக செய்ததா? உண்மையான தியாகமா? என்று நமக்கு தெரியாது. அல்லாஹ்வே அதனை நன்றாகவே அறிகிறான். எம்மை எப்போதும் உண்மையான தியாகம் செய்பவர்களுடன் இணைப்பாயாக! என்று கேட்க வேண்டும்.

நீங்கள் இந்தப் பள்ளிவாசலை கட்டுகிறீர்கள். இது நமது ஜமாஅத் சகோதரர்களின் பொருள் தியாகத்தின் மூலமே கட்டப்பட்டுள்ளது. நாம் நமது இந்த பள்ளிவாசலைக் கட்டும் விஷயத்தில் நமது உள்ளத்தை துளைத்துப் பார்த்தவாறு தியாகம் செய்ய வேண்டும். அல்லாஹ்வே! எமது இந்த தியாகத்தை உனது திருப்திக்கு காரணமாக்குவாயாக!

எமது உள்ளத்தில் நாம் மிகப்பெரும் தியாகத்தை செய்து விட்டோம். அல்லது செய்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் ஒருபோதும் வரக்கூடாது. உங்களில் பலர் இங்கு நன்றாக சம்பாதிக்கக் கூடியவர்கள் ஆவர். பாகிஸ்தான் மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் ஏழை நாடுகளிலுள்ள அஹ்மதிகள் தமது வயிற்றுக்கு குறைத்துக் கொண்டு பள்ளிவாசல் கட்டுவதற்காக தியாகம் செய்கின்றனர். இன்னும் அதிகமாக அல்லாஹ் வாய்ப்பு தந்தால் நாம் இன்னும் தரலாமே என்ற எண்ணமே அவர்களுக்கு இருக்கிறது. ஆப்பிரிக்காவிலுள்ள பல அஹ்மதிகளை நான் அறிவேன். முன்னாள்களில் அவர்களின் நிலைமை அவ்வளவு நன்றாக இருந்ததில்லை. இருந்தும் கூட தமது வாய்ப்பிற்கேற்ப தியாகம் செய்து வந்தனர். அவர்களுள் சிலரது வருவாய் அல்லாஹ்வின் அருளால் உயர்ந்துள்ளது. தொழில் விரிவடைந்துள்ளது. அவர்கள் தமது தியாகத்தின் தகுதியை இன்னும் உயர்த்தினர். அதிக வருவாயைக் கொண்டு தமது சொகுசு ஆடம்பரத்தை உயர்த்த வேண்டும் என்று நினைக்கவில்லை. மாறாக, பள்ளிவாசல் கட்டுவதற்கு அளவற்ற முறையில் வழங்கினார்கள். அவர்களுள் சிலர் தனி நபராக இருந்து கொண்டு பள்ளிவாசலைக் கட்டியவர்களும் உண்டு. அல்லாஹ் வியக்கத்தக்க தியாகங்களை செய்யும் உள்ளங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். பிறகும் கூட நாம் தியாகம் செய்து விட்டோம் என்று எண்ணுவதில்லை. நான் ஏற்கனவே கூறியுள்ளேன். இங்கு சிலர் மகிழ்ச்சியுடன் இந்த தியாகத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர். ஆனால் அவர்களுள் சிலர் டப்ளன் பகுதியில் முதலில் மஸ்ஜித் கட்ட வேண்டும் என்று விரும்பினர். ஒரு சிலர் அதற்காக எனக்கு கடிதமும் எழுதினர். ஜமாஅத்தின் எண்ணிக்கை அப்பகுதியில்தான் அதிகமாக உள்ளது. எனவே அவர்களின் விருப்பமும் நியாயமானதே. ஆனால் இன்னும் சில காரணங்களால் இங்கு முதலில் பள்ளிவாசல் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனவே அப்பகுதியில் வசிக்கும் மக்களின் விருப்பத்திற்கு எதிராக இங்கு பள்ளிவாசல் கட்டப்பட்டாலும் கூட அவர்கள் திறந்த மனதுடன் இதில் பங்கு எடுக்க வேண்டும். நாம் டப்ளன் பகுதியில் வசிக்கிறோம். அங்கு தான் முதலில் பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும்.

அல்லது அங்கு கட்டும் போது நாம் பங்கெடுப்போம் என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. இது தலைமையகத்தின் திட்டமாகும். எனவே இதிலும் கூட அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் டப்ளன் பகுதியிலும் பள்ளிவாசல் உருவாகும். அப்போதும் பங்கெடுக்க வேண்டும். இங்கு ஒரு பள்ளிவாசல் திறக்கப்பட உள்ளது. மற்றபடி இத்தோடு நமது பள்ளிவாயில் கட்டும் பணி முடிந்துவிடப் போவதில்லை. எனவே நான் சொல்கிறபடி நடப்பது தான் உங்களது பற்று, விசுவாசத்தை அடையாளம் காட்டும். பற்று, விசுவாசம் காட்டுவதன் ஒரு பொருள் நிபந்தனையை நிறைவேற்றுவதாகும். ஒவ்வொரு அஹ்மதியும் ஓர் உறுதிமொழி எடுத்துள்ளார். நான் எனது உயிர், பொருள், காலம் மற்றும் கௌரவத்தினை எப்போதும் தியாகம் செய்வேன் என்று உறுதி எடுத்துள்ளார்.

இந்நிலையில் உடன்படிக்கையை நிறைவேற்றுதல் என்ற தகுதி நிறைவேற்றுவதற்கு தன்னலமின்றி தன்னால் இயன்ற வரை ஒவ்வொரு அஹ்மதியும் பள்ளிவாசல் கட்டும் பணியில் பங்கெடுக்க வேண்டும். உங்களிடம் இதுவே இப்போது வேண்டப்படுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் கோரிக்கைகளும் வேறுபடுகின்றன. எனவே நீங்கள் இதனை கவனத்தில் கொள்ளுங்கள். அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெறவும், பற்று, விசுவாசத்தை நிலைநாட்டவும் உடன்படிக்கைகளை பேணவும் வேண்டும். இறைவனுடைய வீடாக எந்த கட்டடம் கட்டப்பட்டாலும் அதனை விட ஒருவர் தனது பொருளை மகிழ்ச்சியுடன் செலவு செய்வதற்கு தகுதியானது வேறென்ன இருக்க முடியும்? இறைவனின் வீட்டை கட்டுவதற்கு அல்லாஹ்வுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரிடம் தன்னிடமிருந்த அனைத்தையும் எடுத்து வைத்தார்கள். இறைவன் அந்த தியாகத்தை ஏற்றுக் கொண்டு அவருடைய சந்ததியிலிருந்து தனக்கு மிகச் சிறந்த அன்பிற்குரிய ரஸூலை அனுப்பினான். அத்துடன் அந்த ரஸூலுடன் அந்த இரு சான்றோர்களின் பெயரையும் (ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை)) கியாமத் வரை இணைத்தான். இது எத்தகைய ஒரு தியாகம் எனில் அல்லாஹ்வின் முன்னால் மிக உயரிய அந்தஸ்தைப் பெற்றது.

இன்று நமக்கு இதுவே கட்டளையாகும். நீங்களும் இந்த தியாகத்தின் முன்மாதிரியை முன்னிறுத்தி இறைவனின் வீட்டை கட்டுங்கள். அதன் திசையைக் கூட அல்லாஹ்வின் இந்த புராதன வீட்டை நோக்கி அமையுங்கள். எப்போதும் உங்கள் கவனம் இறைவனின் இபாதத்தின் மீது நிலைக்கட்டும். அத்துடன் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் தியாகமும் நினைவில் நிற்கும். அவர்களின் பற்று, விசுவாசத்தை நினைவில் கொண்டு நமது பற்று, விசுவாசத்தை அமைப்பதற்கு கவனம் ஏற்படும். நமது துஆ எப்போதும் இதன் மூலம் இறைவனால் கேட்கப்படும். இந்த ரூஹ் –ஐத்தான் மஸ்ஜித் கட்டுபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த ரூஹை நிலைநாட்டுவதற்காக அடுத்த வசனத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த குர்பானியின் ரூஹை நிரந்தரமாக்குவதற்கு சில செயல்களையும் செய்ய வேண்டும். சில துஆக்கள் உள்ளன. அதனை செய்து வர வேண்டும். அல்லாஹ்விற்குரிய இந்த இருவர் அதனையே செய்தனர். அந்த துஆ **ரப்பனா வஜ்அல்னா முஸ்லிமைனி லக – எங்கள் இருவரையும் உனக்கு கட்டுப்பட்ட அடியார்களாக்குவாயாக (2:129)**

எனவே வழிபாட்டுத்தளம் அமைப்பவர்களின் முதல் நிபந்தனை அவர்கள் முழுமையாக கட்டுப்பட வேண்டும். அதன் பிறகு பற்று, விசுவாசம், உடன்படிக்கையை நிறைவேற்றுவதன் பக்கம் செல்கிறது. முழுமையான பற்று விசுவாசத்துடன் முழுமையான கட்டுப்படுதல் இருக்கிறது. முழுமையாக கட்டுப்படுதலால்தான் முழுமையான பற்று விசுவாசம் உடன்படிக்கையை நிறைவேற்றுதலின் தரத்தை நிலைநாட்ட முடியும். உடன்படிககை நிறைவேற்றுதலின் தகுதியை நிலைநாட்டியவர்களே முழுமையான கட்டுப்படுதலை வெளிப்படுத்த இயலும்.

மனிதன் முழுமையாக கட்டுப்படும் போதுதான் இந்த தகுதியும் கிடைக்கிறது. அடியார் இறைவனுடன் முழுமையான கட்டுப்படுதலுக்கு உடன்படிக்கை செய்யும் போது துஆ செய்யும் போது அவர் கட்டுப்படுதலின் உயர் முன்மாதிரியைக் காட்டுவார். முடிந்த வரை அதற்காக முயற்சி செய்வேன் என்று உறுதி எடுப்பதாகும். கட்டுப்படுதலின் உயர் முன்மாதிரி என்ன? அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு தனது முழுமையான

ஆற்றல்களைக் கொண்டு அமல் செய்தல் ஆகும். அல்லாஹ்வுடைய கடமைகளை நிறைவேற்றுகின்ற அதே வேளையில் அடியார்களின் கடமையையும் நிறைவேற்ற வேண்டும் என்று கவனமூட்டப்பட்டுள்ளது. இபாதத்தின் தரத்தை உயர்த்துகிற அதே வேளையில் ஜமாஅத் அமைப்பிற்கு முழுமையாக கட்டுப்படவும் வேண்டும். மக்களின் கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் வேண்டும். இந்த முன்மாதிரியை மனிதன் தானே நிலைநாட்டியவாறு இந்த நன்மைகள் நம்முடன் முடிந்து விடக்கூடாது என்று துஆவும் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதற்காக இறைவன் துஆவையும் கற்றுத் தந்தான். எமது சந்ததிகளிலிருந்து தூய கட்டுப்பட்ட ஜமாஅத்தை உருவாக்குவாயாக! அவர்கள் உனது இபாதத்தின் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருக்க வேண்டும். உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்களின் உரிமையையும் நிலைநாட்ட வேண்டும். பெரும்பாலான மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் பைஅத் செய்தனர். ஸர்கத் பகுதியில் தப்லீக் நடந்தது. பைஅத் செய்தவர்கள் தமது மனைவி மக்களுக்கு சரியான பயிற்சி அளிக்க முடியவில்லை. அவர்களையும் ஜமாஅத்துடன் இணைக்க முடியவில்லை. அதனால் அடுத்தடுத்த சந்ததிகள் பிரிந்து போய்விட்டனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்று அறிய முடியாமல் போனது. எனவே மனிதன் துஆ செய்ய வேண்டும். எப்போதும் முழுமையாக கட்டுப்பட வேண்டும். இறை கட்டளையைப் பேண வேண்டும். யாரது கையை பற்ற வைக்கப்பட்டோமோ அதனை பற்றியிருக்க வேண்டும். அதே வேளையில் தமது சந்ததிகளுக்காகவும் துஆ செய்கின்றனர். முயற்சி செய்கின்றனர். அப்போதுதான் வெற்றி கிடைக்கிறது.

எனவே இது எத்தகைய ஒரு துஆவின் தொடர் எனில், இது எப்போதும் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். துஆவுடன் இறைவனின் வீட்டை கட்ட முயற்சி செய்ய வேண்டும். இது கிடைத்தால் மனிதனுக்கு உலகமும் மறுமையும் புரிய வரும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகிய இருவரது துஆவையும் அல்லாஹ் எவ்வாறு ஏற்றுக் கொண்டான் எனில், முழு உலக பள்ளிவாசலுக்கும் முன்னோடியாகி விட்டது. அவ்விருவரின் சந்ததியில் இருந்து மகத்தான ஒரு ரஸூல் பிறந்தார்கள். அன்னார் கட்டுப்படுதல், வணக்கம் ஆகியவற்றின் புதிய மகத்தான தகுதியை நிலைநாட்டிக் காட்டினார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை விட அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இபாதத்தின் – கட்டுப்படுதலின் உயர் தகுதியை ஏற்படுத்தினான். அத்துடன் நமக்கும் கட்டளையிட்டான்.

**நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்வின் இந்த ரஸூலிடம் அழகிய முன்மாதிரி உள்ளது. (33:22)**

பள்ளிவாசல் கட்டும் விஷயத்தில் அவர்களின் முன்மாதிரியை கூறுகிறேன். இந்த நபி மூலமாகவே இபாதத்தின் புதிய புதிய தகுதிகள் வெளிப்படுகின்றன. தான் மட்டுமே இதனை நிலைநாட்டியதோடு நிற்கவில்லை. சஹாபாக்களிடமும் இந்த ரூஹை ஊதினார்கள். ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து தொழுவதற்காக மதீனாவுக்குள் நுழைந்ததும் முதன்முதலில் ஒரு பள்ளிவாசலைத்தான் கட்டினார்கள். உம்மத்தினர் ஒரே இறைவனை வணங்குவதில் கவனத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காகவும், ஓரிடத்தில் ஒன்றுகூடி எல்லாரும் இபாதத் செய்வதற்காகவும் அவ்வாறு கட்டினார்கள்.

பிறகு மஸ்ஜித் நபவி இரவும் பகலும் இறைவனுக்கு இபாதத் செய்யும் இடமாக இருப்பதை இப்போதும் உலகம் கண்டு வருகிறது; இன்றளவும் தொடர்கிறது. இறைவனது பள்ளிவாசலைக் கட்டுவதுடன் தமது சந்ததிகளை அதோடு இணைப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் மஸ்ஜித் கட்டுவதன் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். அதுவன்றி செங்கல், சிமெண்ட், மரம் ஆகியவற்றை சேர்த்து நிலைநாட்டுவதில் எந்த பயனும் இல்லை. எனவே நாம் சிறிது பொருள் தியாகம் செய்து பள்ளிவாசலைக் கட்டி விட்டால் நமது பொறுப்பு முடிந்து விடும் என்று கருத வேண்டாம். பள்ளிவாசலின் அடித்தளம் முதல் கூரை வரை உள்ள ஒவ்வொரு கல்லும் வைக்கப்படும் போது நம் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உள்ளது. அது என்னவெனில், அப்பள்ளிவாசல் எப்போதும் தொழுகையாளிகளால் நிரம்பியிருக்க துஆ செய்யவும்

வேண்டும். அதன் மூலம் நமது உள்ளம் இறைவனை இபாதத் செய்வதன் பக்கம் சாய்ந்து இருக்க வேண்டும். நமது சந்ததிகளின் உள்ளமும் இறைவனின் இபாதத்தின் பக்கம் திரும்ப வேண்டும்.

பள்ளிவாசல்களுள் சில இருக்கின்றன. அவற்றைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிட்டும் உள்ளான். அவற்றின் அடித்தளமே குழப்பம் விளைவிப்பதுதான். ஆனால் நமது பள்ளிவாசலின் அடித்தளம் இறையச்சமாக இருக்க வேண்டும். உண்மையான மகிழ்ச்சிக்குரிய பள்ளியின் அடித்தளமாவது நாம் அல்லாஹ்வின் முன் அதிகமாக குனிவதுதான். இந்த பள்ளிவாசலின் கட்டுமானம் முடிந்தவுடன் இபாதத்திற்காக அதனை நிறைக்க வேண்டும்.

பிறகு இந்த வசனத்தில் இன்னொரு துஆவும் உள்ளது. **ரப்பனா வஜ்அல்னா முஸ்லிமைனி லக – எங்கள் இருவரையும் உனக்கு கட்டுப்பட்ட அடியார்களாக்குவாயாக (2:129)**

என் இறைவா! எங்களுக்கு உன்னிடம் ஒப்புக் கொள்ளப்படத்தக்க தியாகத்தின் வழியைக் கற்றுத் தருவாயாக! எமது இபாதத்தின் தகுதி உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும். நமது தியாகத்தின் தகுதியும் கூட முன்னரை விட அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். ஆகவே இந்தப் பள்ளி இங்கு வசிப்பவர்களின் பெரும் பொறுப்பை சுமத்துகிறது. அந்த அசல் நோக்கத்தை பின்பற்ற வேண்டும். பிறகு அல்லாஹ்விடம் நமது தியாகங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கடைசியில் இந்த வசனத்தில் கூறப்பட்ட துஆ வதுப் அலைனா – என் இறைவா எமது தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு கருணையுடன் எம் பக்கம் திரும்புவாயாக! அதாவது நாங்கள் எவ்வளவு முயன்றாலும் இபாதத்தில் கவனம் செலுத்தினாலும் அடியார்களின் கடமையின் பக்கம் கவனம் செலுத்தினாலும், எமது சந்ததிகளின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தினாலும் உனது தூதுச் செய்தி சென்று சேர்ப்பதன் பக்கம் கவனம் செலுத்தினாலும் எமது பணியில் குறைவுகள் ஏற்படலாம். மனித இயல்பின் விளைவு அதுவே. எனவே எமது அசட்டையின் காரணத்தால் எம்மீது ஒப்படைக்கப்பட்ட பணி முடங்கிவிடக் கூடாது. எனவே நாம் துஆ செய்கிறோம். அல்லாஹ்வே! உனது அருளால் எங்கள் மீது கவனம் செலுத்துவாயாக! எம்மிடம் ஏற்பட்ட குறைகளை மன்னிப்பாயாக! எம்மை பொறுத்தருள்வாயாக! அதிகமாக தவ்பாவை ஏற்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவாய். எனவே வேண்டுமென்றே தவறு செய்யாதவரின் தவ்பாவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மீண்டும் மீண்டும் கருணை காட்டப்படுகிறது. எனவே இது துஆ மற்றும் நற்செயல்களின் தொடராகும். பாவத்திலிருந்து தப்பிப்பதற்குரிய தொடர் செயலாகும். இந்த தொடர் முயற்சி நம்மிடம் இருந்தால் இறைவனும் அருள் புரிகிறான். மஸ்ஜிதின் நிர்மாணம் மற்றும் அத்துடன் இணைந்த சில விஷயங்களை கூறுமிடத்து அத்துடன் நம்மீது அதிகரித்துள்ள சில பொறுப்புகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்தப் பள்ளிவாசலின் அடித்தளம் அமைக்கும் விழாவுடன் சேர்ந்து பத்திரிகை, மீடியா, மற்ற மக்களின் கவனம் ஆகியவை நம் பக்கம் திரும்பும். ஜமாஅத்தின் இந்த அறிமுகத்துடன் மக்களின் கவனம் நம் பக்கம் திரும்பலாம். பல்வேறு நாடுகளிலிருந்து நாம் பெற்ற அனுபவத்திலிருந்து இதுவே தெரிய வருகிறது. மக்களின் கவனம் இதன் மூலம் திரும்புகிறது. கட்டடங்கள் உயர உயர மக்களின் கவனமும் திரும்புகிறது. அதன் மூலம் இங்கு இருக்கிற ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பும் உயர்கிறது. இதனை அஹ்மதிகள் உணர வேண்டும். உள்ளூர் மக்கள் இங்கு வருவார்கள். இதன் மூலம் தப்லீகின் வழி திறக்கும் என்று நம்புகிறேன். தப்லீகை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படும். உங்களுக்கு பல்வேறு வழிகளில் நமது செய்தியை மக்களிடம் சேர்ப்பதற்கு முன்னரை விட அதிகம் முயற்சி செய்ய வேண்டியதும் ஏற்படும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

இஸ்லாத்தை அறிமுகம் செய்ய விரும்பினால் உண்மையின் தூதை எடுத்து வைக்க விரும்பினால் எப்பகுதியில் இந்த நோக்கத்தை நிறைவேற்ற நினைக்கிறோமோ அங்கு பள்ளிவாசலைக் கட்டுங்கள்.

இந்த மஸ்ஜித் கட்டியதுடன் நீங்கள் ஒரு நிர்பந்தத்திற்கு உள்ளாவீர்கள் என்று நம்புகிறேன். தப்லீகை விரிவுபடுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாவீர்கள். நீங்களே விரும்பா விட்டாலும் தப்லீகை விரிவுபடுத்தியே ஆக வேண்டியது ஏற்படும். உங்கள் பற்று, விசுவாசத்தை நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும் எனில் அதனை செய்தே ஆக வேண்டும். ஆனால் அத்துடன் இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் ஆணாயினும், பெண்ணாயினும், வயோதிகராயினும், இளைஞராயினும் உங்கள் முன்மாதிரியையும் நிலைநாட்ட வேண்டும். அல்லாஹ்விடம் தவ்பா, இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். அதன் மூலம் அல்லாஹ் உங்களுக்கு ஆற்றலை வழங்கட்டும். பாருங்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள், இஸ்மாயீல் (அலை) அவர்கள் கஅபா இல்லத்தின் அடித்தளத்தை உயர்த்திய போது இரண்டே இரண்டு பேர்தான். பள்ளிவாசலைக் கட்டத் தொடங்கியதும் மிக உறுதியாக நம்பினார்கள். நம்மிடம் அல்லாஹ் ஒரு முக்கியமான பணியை வழங்கியிருக்கிறான். நமது பிள்ளைகளிடமும் இதனை விரிவுபடுத்துவான் என்று உறுதிகொண்டு சந்ததிகளுக்காகவும் துஆ செய்தார்கள். எங்களிடமிருந்து தோன்றக் கூடிய சந்ததிகளிடம் இதன் மீது கவனம் ஏற்படுத்துவாயாக! என்று வேண்டினர். ஆனால் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உம்மத்துகள் ஆவோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பருடன் வேறு தொடர்புள்ளவர்கள் ஆவோம். நாம் இந்த வளர்ச்சி அடைந்த அவர்களின் உம்மத்தைப் பார்த்தும் உள்ளோம். இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களையும் இப்ராஹீம் என்று பெயரிட்டு அழைத்தான்.

எனவே இந்த இப்ராஹீமின் துஆவும் நிறைவேறி வருவதை நாம் பார்த்துள்ளோம். அல்லாஹ் அவர்களுக்கு ஓர் அரபி இல்ஹாமில் கூறுகிறான்:

நான் உனக்கு ஆறுதல் அளிப்பேன். உன் பெயரை அழியவிடமாட்டேன். உன்னிடமிருந்து பெரும் சமுதாயத்தை உருவாக்குவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மேற்கண்ட இல்ஹாமுடன் உள்ளத்தில் எனக்கு போடப்பட்ட கருத்தாவது நான் இப்ராஹீமை ஒரு சமுதாயமாக ஆக்கி உள்ளேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான தாசர் மூலமாக இந்த சமுதாயம் உருவாகி வருகிறது. அது இறைவனது சிறப்பான உதவி மூலம் உருவாகி வருகிறது. இந்த சமுதாயத்தின் இபாதத்திற்குரிய ஆயத்தமாக இந்த பள்ளிவாசலையும் அல்லாஹ் தனது அருளால் உருவாக்க வாய்ப்பு வழங்கியுள்ளான். ஆனால் இந்த நிர்மாணத்தின் பரக்கத்துடன் சரியான முறையில் இதனை பயன்படுத்துவதற்கு நாம் தவ்பா மற்றும் இஸ்திக்ஃபாருடன் அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்புடன் ஒவ்வொரு நொடியும் முன்னேறுவதற்கான அவசியம் உள்ளது. அதன் மூலமே நாமும் நமது சந்ததியும் எப்போதும் அதன் பழங்களை உண்டு வருவோம். நமது குர்பானிகள் அல்லாஹ்வின் முன் ஒப்புக் கொள்ளப்படும். நமது இபாதத்துகளின் தரம் உயர்ந்து கொண்டிருக்கும். நாம் நமது சந்ததிகளிடமும் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதியத்திடமும் உறுதியான தொடர்பின் ரூஹை உருவாக்கிக் கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான தவ்ஃபீக்கை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT KATWAE, IRELAND**

**ON 17.09.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**